## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110–ன் கீழ் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் அறிக்கை – 10.5.2012

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இன்று, அதாவது 10.5.2012 அதிகாலை 00.30 மணியளவில் மேட்டூர் அனல் மின் நிலையத்தின் நிலக்கரி கையாளும் பகுதியில் தீ விபத்து ஏற்பட்டது. இதனையடுத்து, 9 தீயணைப்பு வண்டிகள் உடனடியாக தீயணைப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டதன் காரணமாக, சுமார் 4 மணி நேரத்திற்குள் தீ முழுவதும் அணைக்கப்பட்டுவிட்டது. இதன் மூலம் அனல் மின்நிலையத்திற்கு ஏற்படவிருந்த பெரும் பாதிப்பு தவிர்க்கப்பட்டது.

இந்தத் தீ விபத்தின் காரணமாக, இரண்டு சந்திப்பு கோபுரங்களுக்கு இடையே உள்ள நிலக்கரி கையாளும் பகுதி மற்றும் Conveyor System முற்றிலுமாக சேதம் அடைந்துள்ளதால், மேட்டூர் அனல் மின்நிலையத்தின் நான்கு யூனிட்டுகளுக்கும் நிலக்கரி எடுத்துச் செல்ல முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. தற்போது Bunker–ல் உள்ள நிலக்கரி மூலம் இன்று மாலை வரை மட்டுமே மேட்டூர் அனல் மின் நிலையத்தை இயக்க இயலும்.

இந்தத் தீவிபத்தின் விளைவாக, மேட்டூர் அனல் மின் நிலையத்திலிருந்து உற்பத்தி செய்யப்படும் 840 மெகாவாட் மின் உற்பத்திக்கு தடை ஏற்பட்டுள்ளது. இந்தத் தீ விபத்தினால் ஏற்பட்ட பாதிப்புகளை சீர்செய்து, மீண்டும் மின் உற்பத்தி பணிகளை துவக்க சுமார் ஒரு மாத காலம் ஆகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

எனினும், பொதுமக்களுக்கு பாதிப்பினை இயன்ற அளவு குறைக்கும் வகையில், தற்போது இயங்காமல் உள்ள தூத்துக்குடி அனல் மின்நிலையத்தின் ஒரு யூனிட்டையும், வடசென்னை அனல் மின் நிலையத்தில் இயங்காமல் உள்ள ஒரு யூனிட்டையும் இன்று முதல் இயக்க போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 420 மெகாவாட் மின் உற்பத்தி கிடைக்க வழிவகை ஏற்படும்.

மேலும், பிள்ளைபெருமாள்நல்லூரில் உள்ள தனியார் மின் உற்பத்தி நிலையத்திலிருந்து 330 மெகாவாட் மின்சாரம் பெறப்படும். இவற்றின்மூலம், இழப்பு ஏற்பட்டுள்ள 840 மெகாவாட் மின்சாரத்தில் 750 மெகாவாட் மின்சாரம் கிடைத்துவிடும்.

தீ விபத்தால் பாதிக்கப்பட்டுள்ள மேட்டூர் அனல் மின் நிலையத்தில் சீரமைக்கும் பணிகளை உடனடியாக மேற்கொண்டு, அந்தப் பணிகள் விரைந்து முடிக்கப்பட வேண்டும் என்று நான் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளேன்.

இந்தத் தீ விபத்தில் உயிரிழந்த உதவியாளர் திரு. நல்லதம்பி அவர்களின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் தீ விபத்தில் படுகாயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள உதவியாளர் திரு. கோபால் அவர்களுக்கு நல்ல முறையில் சிகிச்சை அளிக்க மாவட்ட நிர்வாகத்திற்கு நான் உத்தரவிட்டுள்ளேன். மேலும், அவர் விரைவில் பூரண குணமடைந்து வீடு திரும்ப வேண்டும் என்ற என்னுடைய விருப்பத்தினையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இந்தத் தீவிபத்தில் உயிரிழந்த நல்லதம்பி அவர்களின் குடும்பத்திற்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து 2 லட்சம் ரூபாய் வழங்கப்படும் என்பதையும், காயமடைந்த திரு. கோபால் அவர்களுக்கு 25,000 ரூபாய் வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

*******